**செய்தி வெளியீடு எண் : 323** **நாள்: 05.03.2022**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்கான நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்கள் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் டெல்லி சென்றடைந்தனர்.

இக்குழுவினர் புதுடெல்லியில் இன்று (05.03.2022) காலை 11.00 மணிக்கு ஒன்றிய அரசின் மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை சந்தித்து தமிழக மக்களை தாயகம் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்து தருமாறு கேட்டுக் கொண்டார்கள். இக்குழுவின் உறுப்பினர்கள் திரு. கலாநிதி வீராசாமி, திரு. எம்.எம். அப்துல்லா மற்றும் தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, மேலாண்மை இயக்குநர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இணை மேலாண்மை இயக்குநர் திரு. மா.பிரதீப் குமார், மேலாண்மை இயக்குநர் திரு. அஜய் யாதவ், மேலாண்மை இயக்குநர் திரு. கோவிந்தராவ் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**